[3rd April 1965

யன்றங்களும் தீர்மானம் நிறைவேற்றி அனுப்பி இருக்கிறது. அரசாங்கம் அதைப்பற்றிப் பரிசீலனைசெய்து நடவடிக்கை எடுத்துக் கொள்ளுமா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : கனம் அங்கத்தினர் கூறுகின்ற ஆலோசனை ஏற்கனவே அரசாங்கத்தால் பரிசீலிக்கப் பட்டு கைவிடப்பட்டது.

திரு. கோ. சி. மணி : அரசாங்கம் மருத்துவ மனைகளைத் தீவிர மாக ஏற்படுத்திக் கொண்டு வருவதைப் பற்றி அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். ஏற்கனவே கட்டப்பட்டிருக்கிற பழைய ஆஸ்பத்திரிகளிலேயே டாக்டர்கள் இல்லாத நிலைமை இருக்கிறது என்பது அரசாங்கத்திற்குத் தெரியும். ஆகவே, உட னடியாக நடவடிக்கை எடுத்து இல்லாத ஆஸ்பத்திரிகளுக்கு டாக்டர்களைப் போடும் உத்தேசம் உண்டா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : இல்லாத ஆஸ்பத்திரி களில் டாக்டர்களை எப்படிப் போடமுடியும் ஸார்! (சிரிப்பு)

திரு. கோ. சி. மணி : நான் சொன்னது டாக்டர்கள் இல்லாத . .

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : டாக்டர்கள் இல்லாத ஆஸ்பத்திரிகளில் டாக்டர்களைப் போடலாம். இல்லாத ஆஸ்பத்திரி களில் எப்படி டாக்டர்களைப் போடுவது ?

Tuberculosis Sanatorium in Salem district

* 447 *Q.*—Sri M. V. KARIVENGADAM : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether there is any proposal to start a tuberculosis sanatorium in Salem district; and

(*b*) if so, when and where?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : (*a*) No.

(*b*) Does not arise.

திரு. வி. ஆர். பெரியண்ணன் : நாமக்கல் வட்டத்தில் டி.பி. சானடோரியம் ஏற்படுத்துவதற்கு வசதியாக 100 ஏக்கருக்கு மேற் பட்ட புறம்போக்கு நிலம் இருக்கிறது அதற்காக அங்கே ஒரு குழு அமைக்கப்பட்டு அங்கே டி.பி. சானடோரியத்தை அமைக்க வேண்டுமென்று தீர்மானம் போட்டு அரசாங்கத்திற்கு அனுப்பி யிருக்கிறார்கள். அதன் பேரில் என்ன நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்பட்டது ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : அந்தத் தகவல் தற்போது என்னிடத்தில் இல்லை. அதைப்பற்றி எக்ஸாமின் பண்ணுகிறேன்.